ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 07.02.2016 |

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.1 - 2017

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (2013=100) ஏற்படும் ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான, உணவு மற்றும் உணவல்லா பணவீக்கம் இரண்டினாலும் பங்களிக்கப்பட்ட முதன்மைப் பணவீக்கம் 2016 திசெம்பரின் 4.5 சதவீதத்திலிருந்து 2017 சனவரியில் 5.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கமும் 2016 திசெம்பரில் 5.8 சதவீதத்திலிருந்து 2017 சனவரியில் 7.0 சதவீதத்திற்கு விரைவடைந்தது. காலம் பிந்திக்கிடைக்கத்தக்கதாக இருக்கும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (2013=100) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமும் மையப் பணவீக்கமும் 2016 திசெம்பரில் மேல்நோக்கிய போக்கினைப் பிரதிபலித்து, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 4.2 சதவீதம் மற்றும் 6.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. வரிச்சீராக்கங்களின் தாக்கம் மற்றும் மோசமான வானிலைகளின் தாக்கம் என்பனவற்றின் விளைவாக அண்மைக்காலங்களில் பணவீக்கத்தில் அதிகரிப்புக் காணப்பட்டபோதும் பொருத்தமான வழங்கல்பக்க மற்றும் கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் என்பனவற்றின் ஆதரவுடன் இவ்வாண்டுப்பகுதியில் பணவீக்கம் சராசரியாக நடுஒற்றை இலக்கமட்டத்தில் காணப்படும் என எறிவுசெய்யப்பட்டது.

அதேவேளை, வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2016 இறுதியில் 21.9 சதவீதத்தில் உயர்வாகக் காணப்பட்டது. கொடுகடனின் வளர்சி 2016 யூலையில் அவதானிக்கப்பட்ட 28.5 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்திலிருந்து ஓரளவிற்கு குறைவடைந்தபோதும், பெயரளவு மற்றும் உண்மை வட்டிவீதங்களில் கணிசமமானளவு மேல்நோக்கிய சீராக்கங்கள் காணப்பட்டமைக்கிடையிலும் உண்மை நியதிகளில் கொடுகடனின் பகிர்ந்தளிப்பு உயர்வாகக் காணப்பட்டது. தனியார் மற்றும் அரசதுறைகளுக்கான கொடுகடன் வளர்ச்சியின் முக்கிய விளைவாக, விரிந்த பணத்தின் வளர்ச்சி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2016 இறுதியில் 18.4 சதவீதம் கொண்ட உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. நாணயம் மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் வளர்ச்சி 2017ஆம்

ஆண்டுப் பகுதியில், உண்மைப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி மற்றும் நடுஒற்றை இலக்க பணவீக்கம் என்பனவற்றுடன் இணங்கிச் செல்லுமொரு மட்டத்தினை நோக்கி படிப்படியாக மிதமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டுத் துறையில், 2016இன் முதல் பதினொரு மாதகாலப்பகுதியில், வர்த்தக நிலுவையின் ஒன்று சேர்ந்த பற்றாக்குறை 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனிலிருந்து 2016இன் முதல் பதினொரு மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 8.2 பில்லியனுக்கு மேலும் விரிவடைந்தது. இதற்கு ஏற்றுமதி வருவாய்கள் சுருக்கமடைந்த நிலையில் இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமையே காரணமாகும். சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள் திரண்ட சென்மதிநிலுவையின் மீதான வர்த்தகப் பற்றாக்குறையின் மோசமான தாக்கத்தினை தொடர்ந்தும் தளர்த்தின. 2016ஆம் ஆண்டுப் பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3.4 மில்லியனுக்கு 14.0 சதவீதத்தினால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்ட வேளையில் இக்காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 3.7 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 7.2 பில்லியனுக்கு அதிகரித்தன. ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களின் தேறல் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக இருந்த வேளையில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையிலிருந்தும் சில வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன. 2017 சனவரி இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5.5 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. வெளிநாட்டுத்துறையின் அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2016இல் ஐ.அ.டொலருக்கெதிராக 3.8 சதவீதத்தினால் தேய்வடைந்த இலங்கை ரூபா 2017இல் இதுவரை 0.5 சதவீதத்தினால் மேலும் தேய்வடைந்தது.

மேற்குறிப்பிடப்பட்டவற்றை பரிசீலனையில் கொண்ட நாணயச்சபை 2017 பெப்புருவரி 06ஆம் நாளன்று நடைபெற்ற அதன்கூட்டத்தில், 2015இன் பிற்பகுதியிலிருந்து மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் பின்பற்றப்பட்ட சமநிலைப்படுத்தும் வழிமுறைகளுக்கு பொருளாதாரம் படிப்படியாக பதிலிறுத்திவருகின்றது என்ற கருத்தினைக் கொண்டிருந்தது. எனினும், மேலும் சரியான வழிமுறைகளைப் பின்பற்றும் நோக்குடன் தேவைப்படுமிடத்து பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் நெருக்கமாகக் கண்காணிக்கப்படும். சபையானது இக்கட்டத்தில் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருந்ததுடன் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் மாற்றமின்றி முறையே 7.00 சதவீதத்திலும் 8.50 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **மாற்றமின்றிக் காணப்படுகின்ற கொள்கை வீதங்கள்** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.50% |

| | |
|---|---|
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |